**களனிப் பல்கலைக்கழகம் - 2016**
---------------------------------------------------

களனிப் பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றல் கூற்று, நிதியத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5)ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**
---------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**
------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்க எல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

களனிப் பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றின் நியாயப் பெறுமதியானது அவற்றின் இயலளவு பெறுமதிகளிலிருந்து குறிப்பிடதக்க அளவு வேறுபட்டு இருக்குமாயின் மீள் மதிப்பீடு செய்தல் அவசியமானது என்ற போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 724,931,142 ஆகக் காட்டப்பட்டுள்ள பல்கலைக்கழகத்திற்கு சட்டரீதியாக உரிமையுள்ள காணிகள் 2008 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான இருப்பு மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் இறுதி இருப்பு ரூபா 32,474,645 ஆக இருந்தும் பேரேட்டு கணக்கின் பிரகாரம் அம் மீதி ரூபா 23,517,539 ஆக இருந்ததனால் இறுதி இருப்பு ரூபா 8,957,106 ஆல் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர்கல்விச் செயற்திட்டத்தால் 2012 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 266,980 தொகையான அலுவலக உபகரணங்கள் விற்றுத் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 233,197 தொகையான பாவனைப் பொருட்கள் நிலையான சொத்துக்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே அச்செயற்திட்டத்தால் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 3,258,129 தொகையான அலுவலக உபகரணங்களும் ரூபா 1,117,655 தொகையான கற்பித்தல் உபகரணங்களும் நிலையான சொத்துக்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

**2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

---

பின்வரும் இணக்கமின்னமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 46(6) (vii) ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தின் இயக்குனர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் மாத்திரம் ஆராய்ச்சி சபை தோற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆராய்ச்சி சபையின் தலைவருக்கு சம்பளத்தில் 25 வீத படியை செலுத்துவதற்கும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அத்தலைவர் சபடிகல் விடுமுறையைப் பெற்றிருந்த 05 மாத காலத்திற்காகவும் அவருக்கு அப்படியாக ரூபா 112,019 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம். | |
| (i) நிதிப் பிரமாணம் 371 (2) | முற்பணங்கள் வழங்கிய செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைக்கப்படவேண்டிய போதிலும் சர்வதேச கருத்தரங்கு முற்பணங்கள் ரூபா 5,231,300 தொகையும் ஆராய்ச்சிக்கான முற்பணங்கள் ரூபா 1,169,060 தொகையும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 394 | 2008 நவம்பர் 24 ஆந் திகதியிலிருந்து 2016 யூன் 22 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது இரத்துச் செய்யப்பட்ட ரூபா 2,240,557 மொத்த பெறுமதியான 467 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 (3) | 02 ஆண்டுகளிலிருந்து 09 ஆண்டுகள் வரையான காலமாகக் காணப்பட்டு வந்த ரூபா 14,483,952 பெறுமதியான கேள்வி, பாதுகாப்பு, மற்றும் நானாவித வைப்புக்களை 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை தீர்த்துவைப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 757 | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்ட ரூபா 3,275,687 தொகையான இருப்பு பற்றாக்குறையையும் ரூபா 1,327,930 தொகையான இருப்பு மிகையையும் இனங்கண்டு இருப்பேட்டில் சரி செய்தல் அல்லது நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் இடம்பெறவில்லை. |

| | |
|---|---|
| (v) நிதிப்பிரமாணம் 770, 772 மற்றும் 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | • 02 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக வழங்கப்படாதிருந்த முறையே ரூபா 1,491,834 மற்றும் ரூபா 1,436,333 பெறுமதியான பொருட்கள் மற்றும் பழுதடைந்த பொருட்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>• 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நூல்நிலையப் புத்தக மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட காணமல்போன 35,159 புத்தகங்களின் பெறுமதியை பொறுப்பான நபர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2004 ஜனவரி 26 ஆம் திகதிய தேசிய நூல் நிலைய மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபையின் 2004/நூ/01 ஆம் இலக்க சுற்றறிக்கை. | 2012 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நூல்நிலையப் புத்தகங்களின் மெய்மையாய்வு இடம் பெற்றிருக்கவில்லை. |
| (ஈ) 2006 ஜனவரி 25 ஆந் திகதிய அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| (i) 4.2 (அ) பிரிவு | (i) 2016 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட பிரதான கொள்வனவுத் திட்டத்திற்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அக்கொள்வனவுத்திட்டத்தில் பல்கலைகழக நிதியம் பயன்படுத்தப்பட்ட நிர்மாண ஒப்பந்தங்கள் சம்பந்தமான விபரம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) ஆகக்குறைந்தது 03 ஆண்டு காலத்திற்காக எதிர்பாக்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் பிரதான கொள்வனவுத் திட்டத்தில் பட்டியல் படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான கொள்வனவுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.2.2 மற்றும் 4.2.3 ஆம் பிரிவுகள் | கொள்வனவு காலஅட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 495,212,649 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 474,804,754 ஆக இருந்ததனால் நிதி விளைவுகளில் ரூபா 20,407,895 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. ஊழியர் பணிக்கொடை ரூபா 174,170,879 ஆல் அதிகரித்திருந்தும் அரசாங்கத்தின் புனரமைப்பு மானியம் ரூபா 186,000,000 ஆல் அதிகரித்தல் மற்றும் வட்டி வருமானம் ரூபா 95,426,256 ஆல் அதிகரித்தல் இம்முன்னேற்றம் தொடர்பாக பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளுக்கான நிதி விளைவுகளின் பகுப்பாய்வின் போது 2014 ஆம் ஆண்டிற்கான மிகையில் குறைவு காணப்பட்டிருந்தும் 2012, 2013, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகள் வரை மிகையில் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் பணிக்கொடை மற்றும் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வை மீண்டும் செம்மையாக்கிய பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,279,201,888 தொகையான பங்களிப்பு 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 2,685,538,387 வரை முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல், கற்பித்தல் என்பவற்றிக்கான ஒழுங்குமுறைகளை தயாரித்தல், பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளைத் தயாரித்தல், பல்வேறு கல்வித்துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களை நிர்ணயிப்பதற்காக பரீட்சைகளை நடாத்துதல், வெளிவாரிப் பரீட்சைகளை நடாத்துதல், பல்கலைகழகத்தின் செயற்பாடுகளுக்காக நூல் நிலையங்கள், ஆய்வுகூடங்கள் , ஏனைய கட்டிடங்கள் என்பவற்றை கற்பித்தல் அல்லது குடியிருத்தல் செயற்பாடுகளுக்காக நிர்மாணித்தல், பேராசிரியர்கள், உதவிப்பேராசிரியர்கள், மற்றும் சிரேஸ்ட விரிவுரையாளர் பதவிகளை உருவாக்குதல், புலமைப் பரிசில், மேலதிக புலமைப் பரிசில், சலுகைப் புலமைப் பரிசில், பதக்கங்கள், பரிசுகள் என்பவற்றை உருவாக்குதலும் வழங்குதலும் என்பன பல்கலைகழகத்தின் செயற்பாடுகளாக 1978 இன் 16 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1985 இன் 7 ஆம் இலக்க பல்கலைககழக (திருத்திய) அதிகாரச்சட்டத்தில் காட்டப்பட்டிருந்தது இது சம்பந்தமாகப் பரீட்சித்த போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்காகத் தயாரிகப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 04 குறிக்கோள்கள் 08 ஆம் இலக்கத்தின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் அந்த 08 ஆம் இலக்கத்தில் 974 இலக்குகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் செயல் முன்னேற்றத்தைப் பரீட்சித்த போது மொத்த இலக்குகள் 38 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 32 சதவீதமானவை அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க அமுல்படுத்தப்படாத இலக்குகளின் எண்ணிக்கை 30 சதவீதமாகும்.

**(ஆ) கல்விச் செயலாற்றல்கள்**

(i) மீளாய்வாண்டில் பல்கலைகழகத்தின் கல்வியைப் பெறும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 9,542 ஆகும் முதலாம் ஆண்டிற்காகச் சேர்த்துக்கொள்ளக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 2,635 ஆக இருந்த போதிலும் 2,734 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள். வணிய மற்றும் முகாமைத்துவ பீடம் மற்றும் கல்விப் பீடத்திற்காகச் சேர்த்துக்கொள்ளக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை விட முறையே 58 மற்றும் 51 மாணவர்களால் குறைத்து சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ii) மருத்துவ பீடத்தினால் 2007/2008 கல்வி ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த பேச்சு மற்றும் கேட்டல் விஞ்ஞான கற்கை நெறிக்காக மீளாய்வாண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 50 மாணவர்களில் மூன்று மாணவர்கள் கற்கை நெறியை கைவிட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 44 மாணவர்களில் 11 மாணவர்கள் கற்கை நெறியைக் கைவிட்டிருந்தார்கள்.

**(இ) வெளிவாரிப் பரீட்சை கற்கை நெறிகளை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 29 (ஊ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் அல்லது ஏதாவொரு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மாணவர்கள் அல்லாத நபர்களுக்கு பல்கலைக்கழகத்தின் பட்டம், உயர் அறிவுப்பத்திரம், ஏணைய கல்விசார் நிபுணத்துவங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் வெளிவாரி பரீட்சைகளை நடாத்துவதற்காக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க களணிப் பல்கலைக்கழகத்தாலும் 06 வெளிவாரி பரீட்சை கற்கை நெறிகள் நடாத்தப்படுவதுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பதிவு செய்துகொண்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 95,906 ஆகும். இக்கற்கைநெறிகளை நடாத்துவதன் மூலம் பல்கலைக்கழகத்தால் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 1,542,947,059 மொத்த தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் செலவுகளை மிகைத்த வருமானம் 84 சதவீதத்திலிருந்து 541 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. பல்கலைக்கழகத்தால் 2014 ஆம் ஆண்டின் போது கற்கை நெறி கட்டணங்கள் திருத்தப்பட்டிருந்ததுடன் கற்கைநெறிகளின் பிரகாரம் அதில் 193 சதவீதத்திலிருந்து 438 சதவீதம் வரையான கட்டண அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மேற்கூறியவாறு செலவை மிகைத்த வருமான அதிகரிப்பு சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் கற்கைநெறிக் கட்டணங்களை அதிகரிப்பதற்கான தேவைப்பாடு கணக்காய்வின் போது விளக்கமளிக்கப்படவில்லை.

(ii) மேற்கூறியவாறு கட்டணம் அறவிடப்பட்டிருந்தம் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் வழமைக்குமாறான காலதாமதம் அவதானிக்கப்பட்டதுடன். அக்காலம் 06 மாதங்களிலிருந்து 11/2 ஆண்டுகள் வரையான கால வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஈ) ஆராய்ச்சி நடவடிக்கைகள்

(i) திறைசேரி ஆராய்ச்சி மானியம்

- மீளாய்வாண்டில் 11 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக ரூபா 2,525,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ஆண்டின் இறுதியில் அந்த 11 ஆராய்ச்சிகளுக்காக ரூபா 894,077 அதிலிருந்து பயன்படுத்தப்பட்டிருந்தது.

- 2015 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட 03 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் 2017 செப்தெம்பர் 08 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- இந்த ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட காலம் பல சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்ததுடன் விரிவுரையாளர்கள் கல்வி மற்றும் சபடிகல் விடுமுறையைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தரவுகளைத் சேகரித்தலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளும் தாமதித்தல் என்பன இதற்கான காரணம் என உபவேந்தரால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 22,000,000 வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் 15 விரிவுரையாளர்களின் 17 ஆராய்ச்சிகளுக்காக ரூபா 12,872,344 செலவு செய்யப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் ரூபா 9,127,656 எஞ்சியிருந்ததனால் பயன்பாடு 59 சதவீதமாகும்.

(iii) பல்கலைக்கழக ஆராய்ச்சி மானியமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 28,257,735 மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 9,283,020 தொகையான 02 மீதிகள் 2011ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 06 பேச்சஸ் காணித்துண்டு 1980 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை இக்காணித்துண்டுக்காக குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தினால் 1978 ஆம் ஆண்டின் போது 19.2 பேர்ச்சஸ் காணி ரூபா 1,600,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து அது பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படாது மீளாய்வாண்டின் போது ரூபா 11,923,200 தொகைக்கு தனியார் தரப்பினருக்கு விற்கப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்தால் நிலையான சொத்துக்களை ஆவணப்படுத்துவதற்காக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 1,200,000 செலவு செய்து கணனி மென்பொருள் உருவாக்கப்பட்டிருந்தும் 2012 ஆம் ஆண்டின் பின்னர் அது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் 10 ஆம் அத்தியாயத்தின் 33 ஆம் பந்தியின் பிரகாரம் உடன்படிக்கையை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து உடன்படிக்கையின் பிரகாரம் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2017 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு உடன்படிக்கைகளை மீறிய 19 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 57,238,122 பணம் அறவிடப்படவேண்டியிருந்தது. அவற்றில் 16 நபர்கள் பயிற்சி விரிவுரையாளர்களாகும்.

(ஆ) பிணைப் பெறுமதியை தவணை ரீதியாக கொடுப்பனவு செய்யும் அடிப்படைக்காக இடமளிக்கப்பட்டிருந்ததுடன் தவணைப்பணத்தின் பெறுமதியையும் காலத்தையும் தீர்மானிக்கும் போதும் அறவிடப்பட வேண்டிய பணத்தில் மிகவும் சிறிய தொகையை தவணைப் பணமாகச் செலுத்துவதற்கு இணங்கிக் கொண்டதன் காரணமாக பணம் அறவிடும் போது 10 ஆண்டிற்கும் 15 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட நீண்ட காலம் எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 ஆம் ஆண்டில் உடன்படிக்கைகளை மீறிய நான்கு உத்தியோகத்தர்கள் இருந்ததுடன் அவர்களில் இரண்டு உத்தியோகத்தர்களின் உடன்படிக்கை செய்து கொண்ட பணம் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 4.4 ஒப்பந்த நடைமுறைகளில் குறைபாடு

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலைய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 157,593,998 மதிப்பீட்டில் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் 2014 திசெம்பர் 24 ஆந் திகதி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டதுடன் 2015 சனவரி 16 ஆந் திகதி வேலை ஆரம்பித்தல் முற்பணமாக ரூபா 34,985,842 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் திட்டமிட்ட காணியில் நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்குப் பதிலாக புதிய காணி கொள்வனவு செய்யப்பட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நிர்மாணம் மேற்கொண்டதன் காரணமாக 2016 ஒத்தோபர் மாதம் வரை நிர்மாண நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்கத்தின் பணம் ஒரு ஆண்டிற்கும் மேற்பட்ட காலம் வெளித்தரப்பினர்களால் விளைவற்று வைத்திருக்கப்பட்டன.

## 4.5 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தால் ஒரு அரசாங்க வங்கியில் பேணப்பட்டு வந்த வங்கி நடைமுறைக் கணக்கில் 02 சந்தர்ப்பங்களில் மாத்திரம் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றிருந்ததுடன் ரூபா 3,549,248 தொகையான சராசரி மாதாந்த பண மீதி பேணப்பட்டு வந்துள்ளமை ஒவ்வெரு மாத இறுதியில் வங்கியில் காணப்பட்ட மீதிகளைப் பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பல்கலைக்கழக நிதியத்தின் கீழ் காணப்பட்ட ரூபா 120,000,000 தொகையான 02 நிதியங்கள் 2015 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 2012, 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் விசேட குறிக்கோள்களுக்காகக் கிடைத்த நிதி ஏற்பாடுகளில் முறையே ரூபா 5,423,868, ரூபா 1,026,890 மற்றும் ரூபா 8,460,434 தொகைகள் அக்குறிக்கோள்களுக்காக பயன்படுத்தப்படாது வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன

### 4.6 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்விசார் பதவியணியினரின் நிரந்தரமான அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 649 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 542 ஆகும். அதற்கிணங்க காணப்பட்ட 107 வெற்றிடங்களில் 22 வெற்றிடங்களும் நிறைவேற்று பேராசிரியர் வெற்றிடங்களாகும் பதவிசார் பதவியணியில் வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் 47 விரிவுரையாளர்கள் சபடிகள் விடுமுறையைப் பெற்றிருந்தார்கள்.

(ஆ) கல்விசார் பதவியினருக்கான (தற்காலிகம்) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 122 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 321 ஆக இருந்ததனால் மிகைகளின் எண்ணிக்கை 199 ஆகும்.

(இ) கல்விசாரா பதவியணியினரின் வெற்றிடங்கள் 95 ஆகும்.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்திற்காக ஆண்டில் நிதியைப் பெற்றுக்கொள்ளல், அரசாங்கத்தின் மானியம், ஏனைய மானியங்கள், உழைக்கப்பட்ட வருமானம் முதலியவற்றை வேறு வேறாக இனங்கண்டு ஒவ்வொரு பீடத்திற்குமிடையே பகிர்ந்தளித்தல் தொடர்பான பொழிப்பாக்கிய குறிப்பு செயலாற்றல் அறிக்கையில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சமூக விஞ்ஞான பீடத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரதானஇலக்கும் 18 விசேட குறிக்கோள்களும் காட்டப்பட்டிருந்ததுடன். அதற்காக நிதியத்தை ஈடுபடுத்திய முறையும் ஆண்டிற்கான செயலாற்றலும் மானிடவியல் பீடத்தில் 2016 யூலையிலிருந்து திசெம்பர் வரையான நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்ற செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்பு |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதி கணக்கீடு செய்யப்படாமை. |

| | |
|---|---|
| (ஆ) நூல் நிலையப் புத்தகங்களின் மெய்மையாய்வு | நூல் நிலையப் புத்தகங்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்படாமை. |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்தங்கள் தாமதித்தலும் அடிக்கடி ஒப்பந்த காலத்தை நீடித்தலும் |
| (ஈ) முற்பணக் கட்டுப்பாடு | முற்பணங்களை தீர்த்துவைப்பதில் தாமதம் |
| (உ) களஞ்சியக் கட்டுப்பாடு | இருப்பு பற்றாக்குறையும் மிகையும் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்காமை மற்றும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத பொருட்களை விற்றுத்தீர்ப்பதில் தாமதம். |